

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள், கூட்டணிக் கட்சி தலைவர்கள் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் மேற்கொள்ளவிற்கும் பிரச்சாரப் பயணங்கள் குறித்த ஆலோசனை கூட்டம் தலைமை தேர்தல் பணிமனையில் முன்னாள் அமைச்சர்கள் கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு தலைமையில் கழக துணை பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘தி.மு.கழகமே மகளிர்க்கு பாதுகாப்பு அரண்!’

# பூ வியாபாரம் செய்யும் சரோஜா சமூக வலைதளப் பதிவு!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. நேரில் சந்தித்து பாராட்டு!

சென்னை, செப்.22-

சென்னை தேனாம்பேட்டை அருகே உள்ள பகுதியை சார்ந்தவர்சரோஜா. இவர்அப்பகுதியில்பூ வியாபாரம் செய்து வருகிறார். சமீபத்தில் சமூக வலைத்தளங்களில் சரோஜா, தி.மு.க. தனக்கு செய்த நன்மைகளையும்,தி.மு.க.இயக்க மகளிரும்தான் இறப்பிற்கு பின்னும் தனக்காக நிற்பார்கள் என்று உருக்கமாக பேசியிருந்தார்.

அதற்கு பதிலளித்த கனிமொழி ராஜாத்திகருணாநிதி,சரோஜாவை நேற்றுநேரில்சந்தித்துஎப்போதும் உங்களுக்காக நாங்கள் உடன் இருக்கிறோம்.



நீங்கள் பேசியதை சமூக வலைத்தளங்களில் பார்த்தேன். அது மிக நன்றாக இருந்தது, மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. உங்களை சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி. உங்களுக்கு என்ன உதவிதேவைப்பட்டாலும்எங்களிடம்சொல்லுங்கள்எனக்கூறினார்.

தொடர்ந்து அவருக்காக புது சேலைவழங்கிஅவரோடுபுகைப் படம் எடுத்துக்கொண்டார்.

அப்போது பேசிய சரோஜா, தி.மு.க. என்றால் எனக்கு உயிர். என் உயிர் உள்ளவரை தி.மு.க. இயக்கத்தில்தான்இருப்பேன்.இது எனதுகொள்கை,இதில்எந்தமாறுபாடும் எனக்கு கிடையாது எனக் கூறினார்.

### முதல் வகுப்பு வினாத்தாள் லீக் விவகாரம்

# த.வெ.க. அரசின் வினோதப் போக்கிற்குக் கண்டனம்!

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, செப். 22-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பள்ளிக்கல்வித்துறையின் செயல்பாடுகள் வினோதமாகவும், கல்வி வளர்ச்சிப் பாதையில் இருந்து தடம் மாறியும் செல்கிறது.

முதல் வகுப்பு ஆங்கில வினாத்தாள் லீக் ஆன விவகாரத்தில் கல்வித்துறை காட்டும் அதிவேக நடவடிக்கை ஆச்சரியம் அளிக்கிறது. ஆனால் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைகளில் எந்த வேகமும் இல்லை.

ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) பிரச்சனைக்கு தீர்வு இல்லை.

பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வில்லை.



வகுப்பறைகளில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.

தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வு வழங்கப்படாமல் பணி நிறைவு பெறும் அவலம் தொடர்கிறது.

இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு களையப்படவில்லை.

அறிஞர் அண்ணா காலத்தில் இருந்து வழங்கப்பட்ட ஊக்க ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

நிர்வாக சீர்கேடுகளும், நீதிமன்ற வழக்குகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவற்றில் எல்லாம் வேகம் காட்டாத கல்வித் துறை, முதல் வகுப்பு வினாத்தாள் விவகாரத்தில் மட்டும் 'ஒரே நாடு, ஒரே வினாத்தாள், ஒரே தேர்வு' என்ற ரீதியில் செயல்படுவது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாநிலம் முழுவதும் பொதுத் தேர்வு வினாத்தாள் தயாரிப்புக் குழு யார்? அதை அச்சடித்தது யார்? வெளியிட்டது யார்? என்பது குறித்து வெளிப்படைத்தன்மை வேண்டும்.

முதல் வகுப்பு குழந்தைகளுக்கு பள்ளி அளவில் நடத்த வேண்டிய தேர்வை, மாநில அளவில் பொதுத்தேர்வாக நடத்துவது ஏற்புடையதல்ல. .

வினாத்தாள் லீக் ஆனதற்கு ஆசிரியர்களை பதற்றத்திற்கு உள்ளாக்கி, உடனடியாக அலுவலகம் வந்து வினாத்தாளை பெற்றுச் செல்ல வேண்டும் என உத்தரவிடுவது கண்டிக்கத்தக்கது.

மாணவர்கள் மகிழ்ச்சியாக கற்றதை வெளிப்படுத்தும் வகையில் தேர்வு முறை இருக்க வேண்டுமே தவிர, அச்சுறுத்தும் வகையில் இருக்கக்கூடாது. வருங்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் தொடக்கக்கல்வித் துறையில் நடைபெறாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப். 22-

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் செப்., 23,24ல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது

அதன் அறிக்கை: வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் நேற்று (செப் 21) ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக் கூடும். அதேபோல், இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, கள்ளக்குறிச்சி, ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று (செப் 22) இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் செப்., 23,24ல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணிச் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில் அண்டவாக்கம் 38 வது பாகத்தில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்த வாக்கு சேகரிப்பில் டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, சரிதா மகேஷ்குமார், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் மாமன்ற உறுப்பினர்கள் உமா சந்தானம் ஸ்நோபா,தமிழ்ச்செல்வி சித்ரா, கோமதி, சாந்தி, விஜயலட்சுமி, ஜெயந்தி ,மல்லிகா, விஜயபாலா, விஜயா, சாய்லட்சுமி, மகேஸ்வரி, ஸ்ரீலேகா, கீதா, தேவி, லட்சுமி, பூங்கொடி, மாலா, பவானி, தேவி மற்றும் அப்பாகத்தின் பொறுப்பாளர்கள் மணிபால், நாகப்பன், ஏகதாஸ், நவீன் குமார், முனியம்மாள்,தில்சாத், ராஜகுமாரி, அஸ்வினி, யுவராணி. ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

### அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் – இன்று

# கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்கு சேகரிக்கிறார்!

## தொகுதிப் பொறுப்பாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் அறிவிப்பு!



06.10.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற இடைத் தேர்தலில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் - வழக்கறிஞர் இ.பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் இன்று (22.9.2026 - செவ்வாய்க்கிழமை) உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க ஊராட்சி வாரியாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வருகை தர உள்ளார்கள்.



அது சமயம் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்தாலோசித்து அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவித்து வாக்கு சேகரிப்பதற்கு எழுச்சியுடன் ஏற்பாடுகளை செய்து உற்சாக வரவேற்பையும் அளித்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

| வ.எண் | நேரம் | ஊராட்சி / கிராமம் | வ.எண் | நேரம் | ஊராட்சி / கிராமம் | வ.எண் | நேரம் | ஊராட்சி / கிராமம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7.00 | கடமலைபுத்தூர் | 9 | 11.00 | கூனங்கரணை | 17 | 3.30 | முருங்கை |
| 2 | 7.30 | எடையாளம் | 10 | 11.30 | ஒரத்தி | 18 | 4.00 | நெடுங்கல் |
| 3 | 8.00 | மி.சித்தாமூர் | 11 | 12.00 | வேப்பங்கரணை | 19 | 4.30 | கரசங்கால் |
| 4 | 8.30 | களத்தூர் | 12 | 12.30 | வடமணிபாக்கம் | 20 | 5.00 | வெளியம்பாக்கம் |
| 5 | 9.00 | கொங்கரைமாம்பட்டு | 13 | 1.00 | விண்ணம்பூண்டி | 21 | 5.30 | சமத்துவபுரம் |
| 6 | 9.30 | கீழ்அத்திவாக்கம் | 14 | 1.30 | தின்னலூர் | | | |
| 7 | 10.00 | புரகால் | 15 | 2.30 | அனந்தமங்கலம் | | | |
| 8 | 10.30 | அன்னங்கால் | 16 | 3.00 | சிறுதாமூர் | | | |

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி - அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம்**

**தா.மோ.அன்பரசன் - க.சுந்தர்**
தொகுதிப் பொறுப்பாளர்கள்
மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி

### மதுராந்தகம் – தாராபுரம் இடைத்தேர்தல்:

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு பல்வேறு கட்சிகள் ஆதரவு!

சென்னை, செப்.22-

நடைபெறவிருக்கும் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு,

ஜி.எஸ்.மதுஹரி கிருஷ்ணா ரெட்டி அவர்களை அகில இந்திய பொதுச் செயலாளராகவும் - ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநில பொறுப்பாளராக கொண்ட சமதா கட்சி;

எம்.முகம்மது இல்யாஸ் அவர்களை நிறுவன தலைவராக கொண்ட தமிழ் தாயக மக்கள் முன்னேற்ற கட்சி;

ஏ.யூனுஸ்கான் அவர்கள் மாநிலத் தலைவராக கொண்ட" தமிழக பழனிபாபா கழகம்";

ஆகிய கட்சிகள் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.

### மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல்! க.சுந்தர் பங்கேற்பு!

# சென்னை தென் மேற்கு மாவட்டம் சார்பில் பணிமனை - ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை. எம்.சி. – கோ.சு மணி அறிக்கை!

சென்னை, செப்.22-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு, மேற்கு பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலை. எம்.சி. - கோ.சு மணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி இன்று மாலை 3 மணிக்கு பி.வி. கார்டன், அரியலூர் மெயின் ரோடு, நெசப்பாக்கம் ஊரில் மாவட்ட கழகத்திற்குட்பட்ட பாகங்கள் 280, 281, 282, 283, 284, 285, 286 நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் பணிமனை திறப்பு நடைபெறுகிறது.

இதில் மாவட்ட அவை தலைவர் மாம்பலம் சந்திரசேகர் தலைமையில் பகுதி செயலாளர்கள் ஏழுமலை, கோ.சு. மணி, நந்தனம் மதி, முரளி ஆகியோர் முன்னிலையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தரம் பணிமனையை திறந்து வைத்து ஆலோசனை வழங்குகிறார்.

ஆகவே மாவட்ட நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல்! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட

# இளைஞரணி சார்பில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் அறிக்கை!

சென்னை, செப். 22-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு காஞ்சிபுரம்வடக்குமாவட்ட இளைஞர் அணிக்கு ஒதுக்கப்பட்ட அருங்குணம் ஊராட்சியில் பாகம் எண் 239-ல் நாள்தோறும் காலை, மாலை வாக்கு சேகரிக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறும்.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.விஜயகுமார், டி.கே. கமலக் கண்ணன், ஓ. ஜானகிராமன், ப.ராமமூர்த்தி, ப.தினேஷ், மாநகர அமைப்பாளர்கள் பி.கே. சத்திய பிரபு, ச.பிரபு, ச. ராஜேஷ், ஜெ.இன்சமான், வி. கார்த்திக், வெ. சிவசுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் - தேர்தல் பொறுப்பாளர் தா.மோ. அன்பரசன் உத்தரவின்படி, கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து ஒன்றிய நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாணவர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இணைந்து வாக்குகளை சேகரிப்பார்கள்.

இவ்வாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

# மதுரை மீனாட்சி கோவில் குடமுழுக்கில் முறைகேடு!

## அமைச்சர் ரமேஷ் மீது விசாரணை!

மதுரை, செப்.22-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவின்போது VIP பாஸ் விற்பனை செய்யப்பட்டதாக எழுந்துள்ள புகார், மிகப்பெரிய அதிர்வலைகளை மதுரை முழுவதும் உண்டாக்கியுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குடமுழுக்கு விழா காண வரும் பக்தர்களுக்காக 2000 பாஸ்கள் ஆன்லைன் மூலம் பக்தர்களுக்கு வினியோகிக்கப்பட்டது. உபயதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்காக பாஸ் அளிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் 3000 பாஸ்களை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் ரமேஷ், 3500 பாஸ்களை அமைச்சர் நிர்மல் குமாரும் வாங்கிச் சென்றதாக புகார் எழுந்தது.

மேலும் கோயில் நிர்வாகம் சார்பில் உபயதாரர்களுக்கு 2000 பாஸ்கள் மட்டுமே வழங்கபட்டதாகவும் சர்ச்சை எழுந்தது. அமைச்சர்கள் வாங்கிச் சென்ற பாஸ்களை ஆயிரக் கணக்கில் பேரம் பேசி விற்பனை செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இந்த நிலையில் வி.ஐ.பி. பாஸ் விற்பனை செய்யப்பட்டதாக புகார் எழுந்துள்ள நிலையில் இது மாநிலம் முழுவதும் அதிர் வலைகளை ஏற்படுத்தியது. இந்த நிலையில் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் மீது எழுந்துள்ள இந்த புகார் குறித்து விளக்கம் அளிக்க முதல்வர் அலுவலகம் உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

அமைச்சர் ரமேஷ் பொறுப்பேற்ற பிறகு அவர் மீது முதல் விசாரணை நடந்திருப்பது இந்து சமய அறநிலைத் துறை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.